1993 ஏப்ரல் 19]

382—

தளவாய் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தல்.

*9830—திரு. ஆர். தங்கராசு :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதியில் தளவாயில் இயங்கும் நடுநிலைப்பள்ளியை உயர் நிலைப்பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

திரு. ஆர். தங்கராசு: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அங்கே அமைக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை என்று கூறுகிறார்கள். அந்தத் தளவாயின் கிராமத்தில் இருக்கிற ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியானது, அங்கே ஓடுகின்ற வெள்ளாற்றுக்கும் ஆணைவாரி ஓடையாக உள்ள அந்தக் காட்டாற்றுக்கும் இடையே அமைந்துள்ளது. அந்தக் கிராமத்தைச் சுற்றி, தளவாய், ஈச்சங்காடு, செங்கமேடு, சேந்தமங்கலம், சிலுப்பனூர், சந்தாசி நல்லூர், சிவராமபுரம், அரங்கனூர் ஆகிய 10 கிராமங்களைச் சேர்ந்த மக்களின் பிள்ளைகள் அந்த நடுநிலைப் பள்ளியில் படிக்கிறார்கள். அங்கே படிக்கிற அவர்கள் உயர்நிலைக் கல்வியைப் பெற வேண்டும் என்றால் அங்கே இருக்கிற வெள்ளாற்றையும் அந்த ஆணைவாரி ஓடையையும் கடந்து குறுக்கே 10 கிலோ மீட்டருக்கு அப்பாலுள்ள குறிச்சிக்குளம் உயர்நிலைப் பள்ளிக்கும், தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள பெண்ணாடம் அரசு மேல் நிலைப் பள்ளிக்கும் சென்று படிக்கிறார்கள். மழைக் காலங்களில் வெள்ளம் வருகிறபோது, அவர்கள் அங்கேசென்று படிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அந்தக் பகுதியில் வாழ்கின்ற மக்கள் எல்லாம் மிகவும் பின்தங்கிய ஆதி திராவிட மக்கள். எனவே அவர்களின் நலனை முன்னிட்டு, அந் கிராமங்களின் சார்பாக தற்போது அரசுக்கு 31 ஆயிரம் ரூபாய் கட்டப்பட்டு இருக்கிறது, பாக்கி 29 ஆயிரம் ரூபாயை.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்விக்கு வாருங்கள்.

திரு. ஆர். தங்கராசு : ஏற்பாடு செய்கிறோம். எனவே அந்த மக்களுடைய நலனைக் கருதி, அங்கே உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக இந்த ஆண்டிலேயே அமைத்துத் தர, அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது குறித்து எந்த விதமான கருத்துருவும் அரசுக்கு வரவில்லை. வந்தால்தான் அது பற்றி அரசு பரிசீலிக்க முடியும். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். திரு. தங்கராசு.

திரு. ஆர். தங்கராசு : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது தான் அந்தப் பகுதி மக்கள் சார்பாக 31 ஆயிரம் ரூபாயை கட்டியிருக்கிறார்கள். பாக்கி 29 ஆயிரம் ரூபாயும் கட்டப்படும் என்று சொல்லி அரசுக்கு பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதற்கு உடனடியாக மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதி மக்களுடைய நலனில் அக்கறை கொண்டு இந்த நிதி ஆண்டில் அவசியம் அந்தப் பள்ளியை, அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக அமைத்து தரவேண்டும் என்று மீண்டும் மீண்டும் நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கிருந்து கருத்துரு வந்தால்தான் நாங்கள் ஏதாவது ஒரு அபிப்பிராயத்தைச் சொல்ல முடியும். நான் அதைத்தான் மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டி யிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 383 டாக்டர் சு. மணிமேகலை, மாண்புமிகு கல்வி அமைச்சர்.